இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்பு (திருத்தச்) சட்டம்

---

*[1988 மே மாதம் 24 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

1988 மே மாதம் 27 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை: ரூபா 1.50 தபாற் செலவு: ரூபா 1.15

# 1988 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்பு (திருத்தச்) சட்டம்

[1988, மே மாதம் 24 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது],

ச. வ—ஓ. 21/88

## 1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம் 1988 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்பு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கச் சட்டத்தின் 9 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, மக்கள் தீர்ப்புச் சட்டத்தின் 9 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "பொலிசுத் திணைக்களத்தில், இலங்கை அரசாங்க புகையிரதச் சேவையில்" என்ற சொற்களுக்குப் பதிலாக, "பொலிசுத் திணைக்களத்தில், மறியற்சாலைகள் திணைக்களத்தில், இலங்கை அரசாங்க புகையிரதச் சேவையில்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும், முகவரிகளையும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும், தேசிய அடையாள அட்டையின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கங்களையும், முகவரிகளையும்" என்ற சொற்களை இடுவதன்மூலமும் ; அத்துடன்

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "புதிய வாக்கெடுப்பு அவதானிப்பாளரின் பெயரும், முகவரியும் பற்றியும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "புதிய வாக்கெடுப்பு அவதானிப்பாளரின் பெயரும், தேசிய அடையாள அட்டையின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கமும், முகவரியும் பற்றியும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன்மூலமும் :—

"(2) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஆட்களின் பெயர்களையும், தேசிய அடையாள அட்டையின் அல்லது ஓர் அரசாங்கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கங்களையும், முகவரிகளையும் எடுத்துக்கூறுகின்ற எழுத்திலான அறிவித்தல், மக்கள் தீர்ப்பு முகவரால் அல்லது 17 ஆம் பிரிவின் (2) ஆம் உட்

2—ஏ 102751—3,270 (04/88)

பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட ஆளால், வாக்குகள் எண்ணப் படத் தொடங்குமுன்னர் வாக்கெண்ணும் அலுவலருக்குக் கொடுக் கப்படுதல் வேண்டும். எவ்வாக்கெண்ணும் அவதானிப்பாளரின் பெயரும், தேசிய அடையாள அட்டையின் அல்லது ஓர் அரசாங் கத் திணைக்களத்தினால் அல்லது பகிரங்கக் கூட்டுத்தாபனத்தி னால் வழங்கப்பட்ட வேறு அடையாள அட்டையின் இலக்கமும், முகவரியும் அவ்வாறு கொடுக்கப்பட்டிருக்கவில்லையோ அவ்வாக் கெண்ணும் அவதானிப்பாளரை வாக்கெண்ணும் நிலையத்துக் குட் செல்லுவதற்கு அனுமதிக்க வாக்கெண்ணும் அலுவலர் மறுக்கலாம்."; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(3) ஓராம் உட்பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட வாக்கெண்ணும் அவதானிப்பாளர்கள், வாக்குகள் எண்ணப்படுகையில் வருகை தருவதற்கு முன்னர் மக்கள் தீர்ப்புத் தெரிவத்தாட்சி அலுவல ரைச் சந்தித்தல் வேண்டும்; அவர், குறிப்பிட்டவொரு வாக் கெண்ணும் நிலையத்தினுட் செல்வதற்கான அனுமதியை நாடுவ தற்குரிய அதிகாரத்தை அத்தகைய அவதானிப்பாளர்களுள் ஒவ்வொருவருக்கும் வழங்குதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக் கத்தின் 43 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 43 ஆம் பிரிவு, அப்பிரிவின் (ஆ) என் னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆஆ) வாக்கெடுப்பு நிலையமொன்றினுள் குறியிடப்பட்ட வாக்குச்சீட் டொன்றை வேண்டுமென்று வெளிக்காட்டுகின்ற; அல்லது."

முதன்மைச் சட்டவாக் கத்தில் புதிய பாகத்தைச் சேர்த்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 61 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பாகம் இத்தால் சேர்க்கப்படுகின்றதென்பதுடன், இது அச் சட்டவாக்கத்தின் பாகம் V ஆகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பாகம் V

மக்கள் தீர்ப்பு மனுக்கள்

மக்கள் தீர்ப்பு மனுவின்மீது மக்கள் தீர்ப்பு வறிதாதல்.

61அ. (1) குடியரசு முழுவதும் தொடர்பிலான மக் கள் தீர்ப்பு, உயர்நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பிக் கப்படக்கூடியனவான பின்வரும் ஏதுக்களில் ஏதேனும் ஒன்றன் மீதான மக்கள்தீர்ப்பு ஒன்றின்மேல் வறிதான தென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்; அவையா வன :—

(அ) பொதுவான இலஞ்சம், பொதுவான உணவளித் தல் அல்லது பொதுவான அச்சுறுத்தல் காரண மாக அல்லது முன்னர் எடுத்துக் காட்டப்பட்ட வற்றுக்கு ஒத்தவையாகவுள்ள அல்லது ஒத்த வையாகவிராத வேறு துர்நடத்தை அல்லது

வேறு சூழ்நிலைகள் காரணமாகத் தேருநர்களில் ஒருபகுதியினர் அத்தகைய மக்கள் தீர்ப்பில் வாக்களிப்பதற்குத் தடுக்கப்பட்டு அதன் காரணமாக மக்கள் தீர்ப்பின் முடிவு முக்கியமான முறையில் பாதிக்கப்பட்டதெனவும்;

(ஆ) மக்கள் தீர்ப்பானது இச்சட்டத்தின் ஏற்பாடுகளில் விதிக்கப்பட்ட நெறிகளுக்கிணங்க நடாத்தப்படவில்லை எனவும் அத்தகைய இணங்கியொழுகாமை காரணமாக மக்கள்தீர்ப்பின் முடிவு முக்கியமான முறையில் பாதிக்கப்பட்டதெனவும் தோன்றின், அத்தகைய ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமையும்.

(2) ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பில் மக்கள்தீர்ப்பொன்றின் முடிவு, மக்கள்தீர்ப்பொன்று சம்பந்தமானதும், உயர் நீதிமன்றத்தின் திருப்திக்கு எண்பிக்கப்பட்டதுமான ஊழல் அல்லது சட்டவிரோதமான ஒரு பழக்கத்தைப் புரிந்தவரென மக்கள்தீர்ப்பு மனுவொன்றில் சார்த்தப்பட்ட ஆளினால், அல்லது அவரது அறிவுடன் அல்லது சம்மதத்துடன் வேறெவரேனும் ஆளினால் அத்தகைய ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கம் புரியப்பட்டதென்ற ஏதுவின்மீதான அத்தகைய மனுவொன்றின்மேல் வறிதானதென வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

மக்கள் தீர்ப்பு மனுக்களை உயர் நீதிமன்றம் கேட்டுத் தீர்மானித்தல்.

61ஆ. உயர் நீதிமன்றத்தில் ஆகக்குறைந்தது ஐந்து நீதிபதிகளாவது மக்கள்தீர்ப்பு மனுவொன்று தொடர்பான நடவடிக்கையைக் கேட்டுத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், பிரதம நீதியரசர் வேறு வகையாகப் பணித்தாலொழிய அவரும் அவர்களுள் ஒருவராக இருத்தலும் வேண்டும்.

எவர் மனுவை முன்வைக்கலாமென்பது.

61இ. அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியொன்றின் செயலாளரினால் அல்லது எவரேனும் தேருநரினால் மக்கள்தீர்ப்பு மனுவொன்று உயர்நீதிமன்றத்துக்கு முன்வைக்கப்படலாம்.

உரிமை கோரப்படக் கூடிய நிவாரணம்.

61ஈ. மனுதாரர் உரித்துடையவராக இருக்கக்கூடிய பின்வரும் நிவாரணங்களுள் எல்லாம் அல்லது அவற்றுள் எதுவும் மக்கள்தீர்ப்பு மனு ஒன்றில் உரிமைகோரப்படலாம்; அவையாவன :—

(அ) குடியரசு முழுவதும் தொடர்பிலான மக்கள் தீர்ப்பு வறிதானதென்ற ஒரு வெளிப்படுத்துகை; அல்லது

(ஆ) ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பிலான மக்கள் தீர்ப்பு வறிதானதென்ற ஒரு வெளிப்படுத்துகை.

மனுவின் உள்ளடக்கங்கள்.

61உ. மக்கள்தீர்ப்பு மனுவொன்று—

(அ) இச்சட்டத்தின் 61இ என்னும் பிரிவின்கீழ் மனுச்செய்வதற்கு மனுதாரருக்குள்ள உரிமையைக் கூறுதல் வேண்டும்;

(ஆ) மக்கள்தீர்ப்பின் நடாத்துகையையும் முடிவையும் கூறுதல் வேண்டும்;

(இ) மனுதாரர் எந்த முக்கியமான நிகழ்வுகளின்மீது நம்பியிருக்கின்றாரோ அந்த முக்கியமான நிகழ்வுகள்பற்றிய சுருக்கமான கூற்றொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(ஈ) மனுதாரர் சார்த்துகின்ற ஏதேனும் ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கம் பற்றிய முழு விபரங்களையும், அத்தகைய ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கத்தைப் புரிந்துள்ளவர்கள் எனச் சார்த்தப்படும் திறத்தவர்களின் பெயர்களையும், அத்தகைய பழக்கம் புரியப்பட்ட தேதியையும், இடத்தையும் பற்றி இயன்றவரையில் முழுமையான ஒரு கூற்றையும் எடுத்துக் கூறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கமும் அத்தகைய பழக்கம் புரியப்பட்ட தேதியும் இடமும் பற்றிய சார்த்துரைக்கு ஆதரவான ஒரு சத்தியக்கடதாசியுடனும் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்;

(உ) உதாரணமாக, ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பிலான மக்கள்தீர்ப்பு வறிதானதென வெளிப்படுத்தப்படுதல் வேண்டுமென்ற மன்றாடுதலுடன் முடிவுறுதலும், எல்லா மனுதாரரினாலும் கையொப்பமிடப்படுதலும் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளிலுள்ளது எதுவும், மனுவில் சான்று கூறப்படுவதைத் தேவைப்படுத்துவதாகக் கருதப்படுதலோ பொருள்கொள்ளப்படுதலோ ஆகாது.

உயர் நீதிமன்றம் முன்னரான நடவடிக்கை முறை தொடர்பான விசேட ஏற்பாடுகள்.

61ஊ. (1) உயர்நீதிமன்றம், தகுதியென அந்நீதிமன்றம் கருதக்கூடியவாறாக செலவுத்தொகைகள் பற்றிய நியதிகளின்மீது அல்லது வேறுவகையாக, மக்கள்தீர்ப்பு மனுவொன்றிற் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கம்பற்றிய விபரங்கள், மனுவின் நியாயமான அல்லது பயனுடையதான விளக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு நீதிமன்றத்தின் அபிப்பிராயப்படி அவசியமாகவிருக்கக்கூடியவாறான அத்தகைய முறையில் திருத்தப்பட அல்லது பெருப்பிக்கப்பட அனுமதிக்கலாம்; எவ்வாறாயினும், அத்தகைய திருத்தம் அல்லது பெருப்பிப்பு, மனுவில் முன்னர் சார்த்தப்பட்டிராத ஏதேனும் ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கத்தின் விபரங்களை உட்புகுத்தும் விளைவை ஏற்படுத்துமாயின், அதனை நீதிமன்றம் அனுமதித்தலாகாது.

(2) ஒவ்வொரு மக்கள்தீர்ப்பு மனுவும் இயன்றவரை விரைவாக விளங்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய மனு முன்வைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாத காலப்பகுதியினுள் அத்தகைய மனுவின் விளக்கத்தை முடிவுறுத்துவதற்கான ஒவ்வொரு முயற்சியும் எடுக்கப்படுதலும் வேண்டும். உயர்நீதிமன்றம் அத்தகைய மனுவின் விளக்கம் முடிவுற்ற தேதிக்குப் பின்னர் தகாத தாமதமின்றி அத்தகைய மனுவை முடிபுசெய்து கட்டளை ஆக்குதல் வேண்டும்.

உயர் நீதிமன்றத்தின் தீர்மானம்.

61எ. மக்கள்தீர்ப்பு மனுவொன்றின் விளக்கம் முடிவுற்றதும் உயர்நீதிமன்றம் விடயத்துக்கேற்பக் கூடியவாறு முழுவதும் தொடர்பிலான மக்கள்தீர்ப்பு அல்லது ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பிலான மக்கள்தீர்ப்பு வறிதானதாவெனத் தீர்மானித்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய தீர்மானத்தை எழுத்தில் அத்தாட்சிப்படுத்துதலும் வேண்டும்.

அத்தகைய சான்றிதழ் இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகக் கையாளப்படுதல் வேண்டும்.

ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கம் பற்றி உயர் நீதிமன்றத்தின் அறிக்கை.

61ஏ. மக்கள்தீர்ப்பு மனுவொன்றின் விளக்கம் முடிவுற்றதும் உயர்நீதிமன்றம், ஏதேனும் ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கத்திற்குக் குற்றவாளிகளாக இருந்தனரென விளக்கத்தில் எண்பிக்கப்பட்டுள்ள ஆட்கள் எல்லோரினதும், எவரேனுமிருப்பின், பெயர்களையும் விவரணங்களையும் தருகின்ற அறிக்கையொன்றையும் செய்தல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், மக்கள்தீர்ப்பு மனுவொன்றுக்கான திறத்தவராகவிராத எவரேனுமாள் இப்பிரிவின்கீழ் உயர்நீதிமன்றத்தினால் அறிக்கையிடப்படுமுன்

னர், நீதிமன்றமானது, அத்தகைய ஆள் கேட்கப்படுவதற்கும் அவருக்கெதிராக ஏன் அவ்வாறு அறிக்கையிடப்படுதலாகாதெனக் காட்டுவதற்குச் சான்று கொடுப்பதற்கும் சான்று அழைப்பதற்கும் ஆன சந்தர்ப்பமொன்றை அவருக்கு அளித்தல் வேண்டும்.

அத்தகைய அறிக்கை இதனகத்துப்பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டவாறாகக் கையாளப்படுதல் வேண்டும்.

சான்றிதழையும் அறிக்கையையும் சனாதிபதிக்கு அனுப்புதல்.

61ஒ. உயர்நீதிமன்றம், 61எ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்பட்ட உயர்நீதிமன்றத்தின் சான்றிதழை 61ஏ என்னும் பிரிவின்கீழ் செய்யப்பட்ட அறிக்கையுடன் சேர்த்து சனாதிபதிக்கு அனுப்புதல் வேண்டும். அதன் மேல், சனாதிபதி அத்தகைய சான்றிதழை அத்தகைய அறிக்கையுடன் சேர்த்து ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

சான்றிதழின் பயன்.

61ஓ. பிரிவு 61ஒ என்பதனால் தேவைப்படுத்தப்பட்டவாறு உயர்நீதிமன்றத்தின் தீர்மானம்பற்றிய சான்றிதழ் ஆணையாளருக்கு அனுப்பப்பட்டதன்மேல், தீர்மானமானது பயனுறுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க—

(அ) குடியரசு முழுவதும் தொடர்பிலான மக்கள் தீர்ப்பு உறுதிப்படுத்தப்படுதலும் வேண்டும்; அல்லது

(ஆ) குடியரசு முழுவதும் தொடர்பிலான மக்கள் தீர்ப்பு வறிதானதென வெளிப்படுத்தப்படுதலும் வேண்டும்; அல்லது

(இ) தீர்மானமானது ஏதேனும் தேர்தல் மாவட்டம் தொடர்பிலான மக்கள்தீர்ப்பு வறிதானதென வெளிப்படுத்தப்படவேண்டுமென்ற பயன்படுவதாக இருக்குமிடத்து, ஆணையாளர், அத்தகைய சான்றிதழ் பெறப்பட்டதிலிருந்து ஒரு மாதத்தினுள், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம், அத்தேர்தல் மாவட்டம் தொடர்பில் மக்கள் தீர்ப்பு நடாத்தப்படுவதனைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

அறிக்கையின் பயன்.

61ஔ. (1) (அ) ஆணையாளர் 61ஒ என்னும் பிரிவின்கீழ் தமக்கு அனுப்பப்பட்ட உயர்நீதிமன்றத்தின் அறிக்கையைப் பெற்றதன்மேல், உடனடியாக அறிக்கையின் பிரதியொன்றை கசெற்றில் வெளியிடுவித்தல் வேண்டும்.

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்ட அறிக்கை எவரேனுமாளினால் ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கமொன்று புரியப்பட்டுள்ளதென்ற

பயன்படுவதாக இருக்குமிடத்து, அவ்வாள் சொல்லப்பட்ட அறிக்கைத் தேதியில் அப்பழக்கத்துக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டிருந்தார் என்றுற்போன்று அதே தகுதியீனங்களுக்கு அவர் அமைந்தவராதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் கசெற்றில் வெளியிடப்படும் அத்தகைய ஒவ்வோர் அறிக்கையையும் உடனடியாக நுணுகிப்பார்வையிடுதலும், மக்கள்தீர்ப்பொன்றில் வாக்களிப்பதற்கு இயலாதவர்களென அறிக்கையிலிருந்து தோன்றுகின்ற ஒவ்வோர் ஆளினதும் பெயரை உடனடியாகத் தேருநர் இடாப்பிலிருந்து நீக்கிவிடுதலும் ஒவ்வொரு பதிவுசெய்யும் அலுவலரினதும் கடமையாதல் வேண்டும்.

முன்வைத்தலுக்கான காலம்.

61க. (1) ஒவ்வொரு மக்கள்தீர்ப்பு மனுவும், மக்கள்தீர்ப்பின் முடிவு கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து இருபத்தியொரு நாட்களினுள் முன்வைக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்மொன்றின் ஏதுவின்மீது மக்கள் தீர்ப்பைக் கேள்விக்குட்படுத்துவதும், அத்தகைய ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கத்தைப் புரிந்தவரெனச் சார்த்தப்பட்டவரினல் அல்லது அவரது அறிவுடன் வேறெவரேனுமாளினல் மேற்கூறப்பட்ட தேதி தொடக்கம் செய்யப்பட்டுள்ள பணக்கொடுப்பனவொன்றை அல்லது செய்யப்பட்டுள்ள வேறு செயலைக் குறிப்பாகச் சார்த்துகின்றதுமான மக்கள்தீர்ப்பு மனுவொன்று, அத்தகைய ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கம் தொடர்புபட்ட அளவுவரை அத்தகைய கொடுப்பனவு அல்லது செயல் செய்யப்பட்ட தேதிக்குப்பின்னர் இருபத்தியெட்டு நாட்களுக்குள் எந்நேரத்திலும் முன்வைக்கப்படலாம்.

(2) உரியகாலத்தில் முன்வைக்கப்பட்ட மக்கள்தீர்ப்பு மனுவொன்று, ஊழல் அல்லது சட்டவிரோதமான பழக்கம் என்ற சார்த்துரையொன்றன்மீது அத்தகைய மக்கள்தீர்ப்பின் செல்லுபடியாந்தன்மையைக் கேள்விக்குட்படுத்தும் நோக்கத்துக்காக, அந்த ஏதுவின்மீது ஒரு மக்கள் தீர்ப்பின் செல்லுபடியாந்தமையைக் கேள்விக்குட்படுத்தும் மக்கள் தீர்ப்பு மனுவொன்று எந்தக் காலத்தினுள் முன்வைக்கப்படலாமோ அந்தக் காலத்தினுள் உயர்நீதிமன்ற நீதிபதியொருவரின் அனுமதியுடன் திருத்தப்படலாம்.

வாக்கை வெளி விடுவதைத் தடை செய்தல்.

61ஞ. மக்கள் தீர்ப்பொன்றில் வாக்களித்துள்ள தேருநரெவரும் அத்தகைய மக்கள்தீர்ப்பின் செல்லுபடியாந் தன்மையைக் கேள்விக்குட்படுத்துவதற்கான நடவடிக்கை எதிலும் அத்தகைய மக்கள்தீர்ப்பில் அவர் எவ்வாறு வாக்களித்தாரெனக் கூறுவதற்குத் தேவைப் படுத்தப்படலாகாது.

நுணித்தாராய்வில் வாக்குகள் நீக்கி விடப்படுதல்.

61ச. (1) மக்கள் தீர்ப்பு மனுவொன்றன் விளக்கத்திலான நுணித்தாராய்வின்மீது பின்வரும் வாக்குகள் மட்டுமே நீக்கிவிடப்படுதல் வேண்டும் ; அவையாவன:—

(அ) வாக்கானது எந்த வாக்கெடுப்பு நிலையத்தில் பதியப்பட்டதோ அந்த வாக்கெடுப்பு நிலையத்திற்குப் பிரித்தொதுக்கப்பட்ட தேருநர் இடாப்பில் பெயரில்லாத எவரேனுமாளின் வாக்கு ;

(ஆ) இலஞ்சம், உணவளித்தல் அல்லது தகாத செல்வாக்கு என்பனமூலம் எவ்வாளின் வாக்குப் பெறப்பட்டதோ அவ்வாள் எவரினதும் வாக்கு ;

(இ) மக்கள் தீர்ப்பில் ஆள்மாறாட்டத்தைப் புரிந்த அல்லது ஆள்மாறாட்டம் புரியப்படுதலைப் பெற்றுக் கொடுத்த எவரேனுமாளின் வாக்கு ;

(ஈ) அரசியலமைப்பின் 89 ஆம் உறுப்புரையின் (உ), (ஊ), (எ), (ஏ), (ஐ), (ஒ) என்ற பந்திகளின் நடைமுறை காரணமாக மக்கள் தீர்ப்பில் வாக்களிப்பதற்கு இயலாதவராகவிருந்த எவரேனுமாளின் வாக்கு ;

(உ) 9 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவு காரணமாக மக்கள் தீர்ப்பில் நேரடியாக வாக்களிக்க உரித்துடையவராகவிராது மக்கள் தீர்ப்பில் நேரடியாக வாக்களித்த எவரேனுமாளின் வாக்கு.

(2) பதிவுசெய்யப்பட்ட தேருநரொருவரின் வாக்கு, (1) ஆம் உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட விடயத்தில் தவிர, தேருநர் இடாப்பில் வாக்காளர் பதிவீடு செய்யப்படாதிருந்தமை காரணமாகமட்டும் அல்லது தமது பெயரைத் தேருநர் இடாப்பில் பதிவீடுசெய்வதற்கு வாக்காளர் தகைமையில்லாதிருந்தமை காரணமாக மட்டும் நுணித்தாராய்வொன்றில் நீக்கப்படலாகாது.

(3) நுணித்தாராய்வொன்றிமீது, செல்லுபடியான வாக்கு என எண்பிக்கப்பட்டுள்ள ஏதேனும் அளிக்கப் பட்ட வாக்கு, மனுவுக்கான திறத்தவரொவரினதும் விண்ணப்பத்தின்மேல் வாக்கெடுப்புடன் சேர்க்கப்படு தல் வேண்டும்.

**மக்கள் தீர்ப்பு மனுக்களின் மீதான நட வடிக்கை முறையும் வழக்காறும்.**

61ஞ. இச்சட்டத்தின்கீழ் மக்கள் தீர்ப்பு மனுக் களின் மீதான நடவடிக்கை முறையும் வழக்காறும் அர சியலமைப்பின் 136 ஆம் உறுப்புரையின்கீழ் உயர்நீதி மன்றத்தினால் ஆக்கப்பட்ட விதிகளுக்கிணங்கவிருத்தல் வேண்டும்.

**வாக்கெண் ணும் அலுவல ரால் வாக்குச் சீட்டு நிராகரிக் கப்படுவது இறுதி யான தாதல்.**

61ண. மக்கள் தீர்ப்பு மனுவொன்றின்மீது வாக்கெண் ணும் அலுவலரொருவரின் முடிபு, வாக்குச் சீட் டொன்று 35 ஆம் பிரிவின்கீழ் நிராகரிக்கப்படினுஞ்சரி அல்லாவிடினுஞ்சரி, கேள்விக்குட்படுத்தப்படுதலா காது.".

**முதன்மைச் சட்டவாக் கத்தின் 71 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 71 ஆம் பிரிவு இத்தாற் பின்வரு மாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட் பிரிவில், "சம்பளக் குறைப்பற்ற லீவை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "எழுத்திலான சம்பளக் குறைப்பற்ற லீவை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) தொழில்தருநர் ஒவ்வொருவரும் பின்வருவனவற்றைத் தருகின்ற கூற்றொன்றைத் தயாரித்தல் வேண்டும் :—

(அ) (1) ஆம் உட்பிரிவின்கீழ் லீவுக்கு விண் ணப்பிக்கும் ஆட்களின் பெயர்கள், அத்து டன்

(ஆ) அவ்வுட்பிரிவின்கீழ் லீவு வழங்கப்பட்டுள்ள ஆட்களின் பெயர்களும் அத்தகைய ஆட் களுக்கு எக்காலப்பகுதிகளுக்கென அத்த கைய லீவு வழங்கப்பட்டுள்ளதோ அக் காலப்பகுதிகளும் ;

அத்துடன் அத்தகைய கூற்றைத் தொழிலிடத்தில் துலாம்பர மாக வெளிக்காட்டிவைக்கச் செய்தல் வேண்டும்."; அத்துடன்

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், " ஓராம் உட்பிரிவின் " என்ற சொற்களுக்குப்பதிலாக, " ஓராம் உட்பிரிவின் அல்லது (1அ) என்னும் உட்பிரிவின் " என்ற சொற்களையும் எண்ணையும் இடு வதன் மூலமும்.

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 74 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "வாக்கெடுப்பு நடைபெறும் நாளுக்கு முன்னைய ஏழாம் நாளுக்கும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "வாக்கெடுப்பு நடைபெறும் நாளுக்கு முன்னைய பத்தாம் நாளுக்கும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(1அ) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்படுகின்றவாறான அத்தகைய அஞ்சல் தொடர்பெதுவும், அஞ்சல் தலைமையதிபதியினால் அல்லது அவரது அதிகாரத்தின் கீழ் செயலாற்றுகின்ற எவரேனுமாளினால் வாக்கெடுப்பு நாளுக்கு முன்னரான பத்தாவது நாளுக்குப் பின்னர் ஒப்படைப்புக்கென ஏற்றுக்கொள்ளப்படுதலோ அல்லது வாக்கெடுப்புத் தேதிக்கு முன்னரான ஐந்தாவது நாளுக்குப் பின்னர் தேருநரொருவருக்கு அவரினால் ஒப்படைக்கப்படுதலோ ஆகாது.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 75 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும் :—

"(2) ஓராம் உட்பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட காலப்பகுதியின் போது ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட வேண்டிய ஒலிபரப்பு நேரம் பின்வரும் முறையில் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் :—

(அ) ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியும், 2 ஆம் பிரிவின் கீழான பிரகடனம் வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு வாரத்தினுள், மக்கள் தீர்ப்பில் மக்களிடம் முன்வைக்கப்படவுள்ள உத்தேசத்துக்கு அது சாதகமாக உள்ளதா அல்லது எதிராகவுள்ளதா என ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்;

(ஆ) இரண்டாம் பிரிவின் கீழான பிரகடனம் வெளியிடப்பட்டதிலிருந்து ஒரு வாரத்தினுள், மக்கள் தீர்ப்பில் மக்களிடம் முன்வைக்கப்படவுள்ள உத்தேசத்துக்கு அது சாதகமாக உள்ளதா அல்லது எதிராகவுள்ளதா என ஆணையாளருக்கு அறிவிக்கத் தவறுகின்ற ஓர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சி, அத்தகைய உத்தேசத்துக்குச் சாதகமாக அல்லது எதிராக இராததாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், (இப்பிரிவில் "நடுநிலைக் கட்சி" ஒன்று எனக் குறிப்பீடு செய்யவும்படுகின்றது);

(இ) பந்தி (அ) வின் கீழான தகவலைப் பெற்ற பின்னர் ஆணையாளர், மக்கள் தீர்ப்பில் மக்களிடம் முன்வைக்கப்படவுள்ள உத்தேசத்துக்கு அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளுள் பெரும்பான்மையினவை சாதகமாகவுள்ளனவா அல்லது எதிராகவுள்ளனவா எனத் தீர்மானித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய பெரும்பான்மை எந்த அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளின் எண்ணிக்கையைக் கொண்டுள்ளதோ அந்த எண்ணிக்கையைப் பதினைந்தினால் பெருக்குதலும் வேண்டும். அத்தகைய பெருக்குதலினால் விளையும் எண்ணிக்கை இதனகத்துப் பின்னர் "மொத்தக் குறித்தொதுக்குகை" எனக் குறிப்பிடு செய்யப்படும்;

(ஈ) மக்கள் தீர்ப்பில் மக்களிடம் முன் வைக்கப்படவுள்ள உத்தேசத்துக்குத் தாம் சாதகமாகவுள்ளனரென ஆணையாளருக்கு அறிவித்துள்ள எல்லாக் கட்சிகளும், கூட்டுமொத்தத்தில் பின்வருவனவற்றைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் :—

(i) வானொலி ஒலிபரப்பின் விடயத்தில், மொத்தக் குறித்தொதுக்குகையை விஞ்சாத நிமிடங்களைக் கொண்ட மொத்தக் காலப்பகுதி; அத்துடன்

(ii) தொலைக்காட்சி அகல்பரப்பலின் விடயத்தில், மொத்தக் குறித்தொதுக்குகையை விஞ்சாத நிமிடங்களைக் கொண்ட மொத்தக் காலப்பகுதி.

அத்தகைய ஒவ்வொரு கட்சியும், வானொலி ஒலிபரப்பின் அல்லது தொலைக்காட்சி அகல்பரப்பலின் விடயத்தில், மக்கள் தீர்ப்பில் மக்களிடம் முன்வைக்கப்படவுள்ள உத்தேசத்துக்குத் தாம் சாதகமாகவுள்ளனரென (அ) என்னும் பந்தியின் கீழ் ஆணையாளருக்கு அறிவித்துள்ள கட்சிகளின் எண்ணிக்கையினால் மொத்தக் குறித்தொதுக்குகையைப் பிரிப்பதன்மூலம் விளையும் எண்ணிக்கையை விஞ்சுகின்ற நிமிடங்களைக் கொண்டவொரு காலப்பகுதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும்;

(உ) மக்கள் தீர்ப்பில் மக்களிடம் முன்வைக்கப்படவுள்ள உத்தேசத்துக்குத் தாம் எதிராகவுள்ளனரென ஆணையாளருக்கு அறிவித்துள்ள எல்லாக் கட்சிகளும், கூட்டுமொத்தத்தில் பின்வருவனவற்றைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் :—

(i) வானொலி ஒலிபரப்பின் விடயத்தில், மொத்தக் குறித்தொதுக்குகையை விஞ்சாத நிமிடங்களைக் கொண்ட மொத்தக் காலப்பகுதி; அத்துடன்

(ii) தொலைக்காட்சி அகல்பரப்பலின் விடயத்தில், மொத்தக் குறித்தொதுக்குகையை விஞ்சாத நிமிடங்களைக் கொண்ட மொத்தக் காலப்பகுதி.

அத்தகைய கட்சி ஒவ்வொன்றும், வானொலி ஒலிபரப்பின் அல்லது தொலைக்காட்சி அகல்பரப்பலின் விடயத்தில் மக்கள் தீர்ப்பில் மக்களிடம் முன்வைக்கப்படவுள்ள உத்தேசத்துக்குத் தாம் எதிராகவுள்ளனரென (அ) என்னும் பந்தியின் கீழ் ஆணையாளருக்கு அறிவித்துள்ள கட்சிகளின் எண்ணிக்கையினால் மொத்தக் குறித்தொதுக்குகையைப் பிரிப்பதன் மூலம் விளையும் நிமிடங்களின் எண்ணிக்கையை விஞ்சாத காலப்பகுதியைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் ;

(ஊ) நடுநிலைக் கட்சியொன்று பின்வருவனவற்றைப் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும் :—

(i) வானொலி ஒலிபரப்பின் விடயத்தில், பதினைந்து நிமிடங்களை விஞ்சாத மொத்தக் காலப்பகுதி ;

(ii) தொலைக்காட்சி அகல்பரப்பலின் விடயத்தில் பதினைந்து நிமிடங்களை விஞ்சாத மொத்தக் காலப் பகுதி ;

(எ) ஆணையாளர், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்க, ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியும் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட ஒலிபரப்பு நேரத்தைத் அதற்கு அறிவித்தல் வேண்டும் ;

(ஏ) மக்கள் தீர்ப்பில் மக்களிடம் முன்வைக்கப்படவுள்ள உத்தேசத்துக்குச் சாதகமாகவுள்ள அல்லது எதிராகவுள்ள எல்லா அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகளும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளுக்கிணங்கத் தீர்மானிக்கப்பட்ட விகிதாசாரங்களினின்றும் வித்தியாசப்படுகின்ற விகிதாசாரங்களில், கூட்டு மொத்தத்தில் அத்தகைய கட்சிகள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட நிமிடங்களைக் கொண்ட மொத்தக் காலப் பகுதியைப் பயன்படுத்துவதற்கு முடிபு செய்யுமிடத்து, அத்தகைய நிமிடங்களைக் கொண்ட மொத்தக் காலப் பகுதியைத் தாம் என்ன விகிதாசாரங்களில் பயன்படுத்த உத்தேசிக்கின்றனரென, 2 ஆம் பிரிவின் கீழான பிரகடனம் செய்யப்பட்டதிலிருந்து இருவாரங்களினுள் அத்தகைய கட்சிகள் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்." ; அத்துடன்

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் உட்பிரிவுகளைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(5) ஆணையாளர், ஒவ்வோர் அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சியையும், (2) ஆம் உட்பிரிவின் கீழ் அது பயன்படுத்த அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியுடன் சேர்த்து மேலதிகமாக, (2)

ஆம் உட்பிரிவில் தரப்பட்டுள்ள நெறிகளைக் கவனத்துட்கொண்டு ஆணையாளரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிகளுக்கு வானொலி, தொலைக்காட்சி, என்பனவாயி லான ஒலிபரப்பு வசதிகளை அனுமதிக்கலாம்.

(6) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரும் இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரும், இப்பிரிவின் முற்போந்த ஏற்பாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்ட வாறு தவிர. மக்கள் தீர்ப்பில் மக்களிடம் முன்வைக்கப்படவுள்ள உத்தேசத்துக்கு ஆதரவாகவுள்ள அல்லது அதனை எதிர்ப்பதாக வுள்ள அல்லது அதற்கு ஆதரவாகவிருக்க அல்லது எதிர்ப்ப தாகவிருக்க முனைகின்ற விடயமெதுவும், 2 ஆம் பிரிவின்கீழான பிரகடனம் செய்யப்பட்ட தேதியன்று தொடங்கி, முடிவு வெளி யிடப்படும் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது வானொலி மூலம் அல்லது தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்பப்படா திருப்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும். இவ்வேற்பாட்டைச் செயற்படுத்துவதில், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரும், இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத்தின் தவிசாளரும் ஆணையாளரின் கலந்தாலோசனையுடன் செயலாற்றல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தில் 76அ, 76ஆ என்னும் புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.**

**10.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவை உடனடுத்துப் பின் வரும் புதிய பிரிவுகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றனவென்பதுடன், இவை அச்சட்டவாக்கத்தின் 76அ. 76ஆ என்னும் பிரிவுகளாகப் பயனுறு தலும் வேண்டும் :—

**"பொலிசார் ஆணையாளருக்கு உதவுதல்.**

76அ. பொலிசு அலுவலர் ஒவ்வொருவரும், இச்சட்டத்தின் கீழ் நடாத்தப்படும் மக்கள் தீர்ப்பொன்றின் ஒழுங்கான நடாத்துகையை உறுதிப்படுத்துதல் வேண்டுமென்பதுடன், அது தொடர்பில் ஆணையாளரினால் அவருக்கு விடுக்கப்படும் ஏதேனும் பணிப்புக்கு இணங்கியொழுகுதலும் வேண்டும்.

**ஒதுக்கப்பட்ட ஒரு வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முடியாதிருக்கும் என்ற நியாயமான பயம் இருக்குமிடத்து வாக்களிப்பதற்கான நடவடிக்கைமுறை.**

76ஆ. (1) வேறேதேனும் சட்டத்தின் ஏற்பாடு எப்படியிருப்பினும், எவரேனும் பதிவு செய்யப்பட்ட தேருநரின் வாக்கெடுப்பு நிலையம் எந்த இடப்பரப்பினுள் அமைந்துள்ளதோ அந்த இடப்பரப்பில் நிலவுகின்ற நிலைமைகள் காரணமாக அத்தகைய வாக்கெடுப்பு நிலையத்தில் தமது வாக்கை அளிப்பதற்குத் தான் இயலாதுள்ளாரென நியாயமாகப் பயப்படுகின்ற அந்தப் பதிவு செய்யப்பட்ட தேருநர், ஆணையாளரினால் அவரது தனித் தற்றுணிபில் தீர்மானிக்கப்படும் இன்னொரு வாக்கெடுப்பு நிலையத்தில் தமது வாக்கை அளிப்பதற்குத் தமக்கு அனுமதியளிக்கும்படி வேண்டுகோள்விடுத்து பெயர் நியமன அறிவித்தற்றேதியிலிருந்து ஒரு வாரத்தினுள் தேர்தல்கள் ஆணையாளருக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஆணையாளர் ஒரு விண்ணப்பத்தைப் பெற்றதிலிருந்து ஒரு வாரத்தினுள் அத்தகைய விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதா அல்லது நிராகரிக்கப்பட்டதாவென அத்தகைய தேருநருக்கு அறிவித்தல் வேண்டும். ஆணையாளரின் முடிவு முற்றானதும் இறுதியானதுமாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், எதேனும் சட்ட நீதிமன்றத்தில் கேள்விக்குட்படுத்தப்படுதலுமாகாது.

(3) அத்தகைய வாக்கு அளிக்கப்படுமிடத்து, அத்தகைய வாக்கானது, அத்தகைய தேருநர் எந்தத் தேர்தல் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளாரோ அந்தத் தேர்தல் மாவட்டத்தின் வாக்குகளுடன் சேர்த்து எண்ணப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை, அந்த அட்டவணையின் படிவம் அ வில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) "தொடர் இலக்கத்தினதும், வாக்கெடுப்புப் பிரிவினதும் அத்துடன் வாக்கெடுப்பு மாவட்டத்தினதும்" என்ற சொற்களுக்குப் பதிலாக "தொடர் இலக்கத்தினதும், தெருவின் அல்லது கிராமத்தின் பெயரினதும், வாக்கெடுப்புப் பிரிவினதும் அத்துடன் வாக்கெடுப்பு மாவட்டத்தினதும்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) "பொலிசுத் திணைக்களத்தில்/இலங்கை அரசாங்க புகையிரதச் சேவையில்/" என்ற சொற்களுக்குப் பதிலாக "பொலிசுத் திணைக்களத்தில்/மறியற்சாலைகள் திணைக்களத்தில்/இலங்கை அரசாங்க புகையிரதச் சேவையில்/" என்ற சொற்களை இடுவதன் மூலமும்.